அசல் வழக்கு எண். 58/2020 வா.சா.4 கன்னியப்பன் த/பெ கோவிந்தராஜ்

**22.08.2024 1 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பின் குறுக்கு விசாரணை**

1. நான் ஆகாரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு பூர்வீகம் ஆகாரம் தான். பிறந்ததில் இருந்தே அங்கு தான் இருந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி நீலகண்டன் என்னை சாட்சியம் சொல்ல அழைத்ததால் நான் வந்தேன் என்றால் சரிதான்.

2. வாதி நிலத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் ஆகும். அதன் சர்வே நெம்பர் எனக்கு நினைவில்லை வழக்கு சொத்தின் நான் தான் பேசி முடித்தேன்.

3. வழக்கு சொத்தின் வாதியின் அப்பா பூபதிக்கு நான் தான் கிரையம் பேசி முடித்து கிரையம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து கிரையம் வாங்கும் சமயத்தில் வாதி சிறு குழந்தையாக இருந்தார் பள்ளிக்கு சென்று நின்றுவிட்டார் ஆடு மாடு மேய்த்துக் கொண்டு இருந்தார். கிரையம் வாங்கும் சமயத்தில் வாதி அவரது அப்பாவுடன் இருந்தார். கிரையம் பற்றி வாதிக்கு தெரியும்.

4. வழக்கு சொத்து வாதியின் தனிப்பட்ட வருமானத்தில் வாங்கப்பட்டதா என்றால் வாதியின் அப்பா வருமானமும் வாதி ஆடு மாடு மேய்த்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தையும் கொண்டு தான் வழக்கு சொத்து வாங்கப்பட்டது. வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தில் நான் 2ம் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். முதல் சாட்சி கையெழுத்து ஏ.கே. ஆறுமுகம் என்பவர் போட்டார். மேலும் துரைசாமி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார்.

5. வா.சா.ஆ. 1கிரையப்பத்திரத்தில் பூபதி தன் பெயரில் மட்டும் கிரையம் வாங்கியதாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், பூபதியும் வாதியும் சேர்ந்து தான் கிரையம் வாங்கினார்கள் நான் சொல்வது போல் பூபதியும் வாதியும் சேர்ந்து கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ. 1 கிரையப்பத்திரத்தில் கண்டுள்ளதாக என்றால் இல்லை.

6. வா.சா.ஆ 1 கிரையப்பத்திரத்திற்கான கிரையத்தொகையை ஆறுமுகத்திடம் பூபதி கொடுத்தாரா என்றால் ஆறுமுகத்திடம் பூபதி கொடுக்கவில்லை ஆனால் சாட்சி துரைசாமி ஆறுமுகத்திடம் கொடுத்தார். சாட்சி துரைசாமியிடம் கிரையத்தொகையை பூபதி கொடுத்தாரா என்றால் பூபதி கொடுத்தாரா அல்லது வேறு யாரும் கொடுத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது அதை நான் பார்க்கவில்லை. சொத்து கிரையம்செய்து கொடுக்கும் போது மற்ற சாட்சிகளுடன் தான் நானும் இருந்தேன் என்றால் சரிதான். நாங்கள் சாட்சிகள் அனைவரும் ஒன்றாக தான் சென்று கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான்.

7. என் முதல் விசாரணை வாக்கு மூலத்தில் 6ம் பத்தியில் பூர்வீக சொத்தை விற்றுத்தான் அவற்றில் வந்த பணத்தை கொண்டு கிணற்றை முழுவதுமாக வெட்டி தண்ணீர் பாய்ச்சும் அளவிற்கு சரிசெய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தானது பூபதிக்கு எவ்வாறு வந்தது என்றால் அவர் பாட்டன் காலத்து சொத்து என்ற வகையில் பூபதிக்கு வந்தது. அந்த பூர்வீக சொத்து பூபதிக்கு எந்த வகையில் வந்தது என்றும் எந்த முறையில் அந்த சொத்தை அவர் விற்றார் என்றும் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது. பூர்வீக சொத்தை விற்றதாக சொன்னார்கள்.

8. பூபதி தன் பூர்வீக சொத்தை எந்த வருடம் விற்றார் என்று எனக்கு தெரியாது. அவ்வாறு விற்றதாக சொல்லும் பூர்வீக சொத்து குறித்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. வாதி தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் திருமணம் முடிந்து ஒன்று இரண்டு மாதங்கள் தனியாக இருந்தார். அதன் பின்னர் வாதி தனது வீட்டிற்கு சென்ற போது வீட்டில் வாதியை சேர்க்காமல் சொத்தில் பங்கு இல்லை என்று கூறி வீட்டை விட்டு அனுப்பி விட்டார்கள் அதன் பிறகு வாதி தனது மனைவியுடன் சென்னைக்கு சென்று விட்டார். வாதி சென்னைக்கு சென்று 12 அல்லது 13 ஆண்டுகள் இருக்குமா என்றால் அதற்கு குறைவாக தான் இருக்கும்.

10. வாதியை தன் வீட்டில் அவரது அப்பா அம்மா சேர்க்க வில்லை என்பதால் என்பதால் நான் வாதி சார்பாக பஞ்சாயத்து எதுவும் பேசினேனா என்றால் இல்லை. அவ்வாறு இருக்க வாதியை தன் வீட்டில் சேர்க்க வில்லை என்று எப்படி சொல்கிறேன் என்றால் ஊரில் எல்லோரும் பேசிக்கொண்டார்கள் அதை வைத்து நானும் சொன்னேன்.

11. வாதி தனது சகோதரி ஏகவள்ளி என்பவரின் திருமணத்திற்காக வைத்திருந்த நகைகளை வீட்டில் இருந்து தெரியாமல் எடுத்து சென்று தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொண்டார் என்றும் அந்த விவரம் எனக்கு தெரிந்தும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நகை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. ஏகவள்ளி என்பவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான்.

12. வழக்கு சொத்தினை பூபதிக்கு கிரையம் கொடுத்த ஆதிமூலம் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. நான் சொல்வது போல் பூபதியை பூர்வீக சொத்தினை விற்று கிணறு சரிசெய்யப்படவில்லை என்றும் பூபதிக்கு கிரையம் கொடுத்த ஆதிமூலத்திற்கு ஜீவன்தாரா அரசு திட்டத்தின் படி கிணறு உருவாக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்து அவரிடம் இருந்து கிரையம் கொடுக்கும் போது பூபதிக்கு வந்தது என்று சொன்னால் சரியல்ல.

13. வழக்கு சொத்து பூபதி தன் சுய சம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெற்ற சொத்து என்றும் அதனால் வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று வாதி தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கிரையம் பெறும் போது வாதி மிக சிறிய வயதில் இருந்தார் என்றும் வாதியின் வருமானத்தில் வழக்கு சொத்து கிரையம் பெறப்படவில்லை என்றும் மேலும் கூட்டு குடும்பத்திற்கு எந்த விதத்திலும் வாதி உறுதுணையாக இருந்தது இல்லை என்றால் சொன்னால் சரியல்ல.

14. பூபதி வழக்கு சொத்தினை 4ம் பிரதிவாதி இளங்கோ என்பவருக்கு விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பூபதி சொத்தினை தன் மருமகன் தட்சிணாமூர்த்திக்கு கிரையம் கொடுத்தால் தன் மகன் கேள்வி கேட்பான் என்பதால் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து பின்னர் தட்சிணாமூர்த்தியே கிரையம் பெற்று கொண்டார். பூபதி 4ம் பிரதிவாதி இளங்கோவிற்கு என்ன உறவுமுறை என்றால் மச்சான் முறை ஆகும். தற்போது வழக்கு சொத்தினை தட்சிணாமூர்த்தி கிரையம்வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

15. வாதி தன் பெற்றோரை கவனிக்கவில்லை என்பதால் பூபதி தன் தேவைக்காக தான் வழக்கு சொத்தினை 4ம் பிரதிவாதி இளங்கோவிற்கு கிரையம் கொடுத்தார் என்றும் நான் சொல்வது போல் தட்சிணாமூர்த்திக்கு நேரடியாக கிரையம் கொடுக்க கூடாது என்பதற்காக இளங்கோவிற்கு கிரையம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

16. வாதி தனது தனிப்பட்ட முறையில் சொத்து எதுவும் வாங்கி அனுபவித்து வருகிறாரா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தினை சரியான முறையில் கிரையம் வாங்கி அனுபவித்து வரும் தட்சிணாமூர்த்தி என்பவரிடம் இருந்து வழக்கு சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக வாதி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து மட்டும் தான் போட்டேன் என்றும் வேறு விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் ஆனால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.